1971 டிசம்பர் 16]

Wages of electricity workers in Municipalities

* 454. *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of Government to enhance the wages of Electricity workers under Municipalities on a par with the wages of Electricity Board workers and

(*b*) if so, from which date?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (ஆ) மதுரை மாநகராட்சியிலும், தஞ்சை, பொள்ளாச்சி, கரூர், கோயம்புத்தூர் நகராட்சிகளிலும் உள்ள மின்சார நிறுவன ஊழியர்களுக்கு மின்வாரிய ஊழியர்களுக்கு அளிக்கப்படும் சம்பள விகிதங்களின் அடிப்படையில் 2—10—1970 முதல் ஊதிய உயர்வு அளிக்கப்பெற்றது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், மதுரை, கோவை போன்ற இந்த 5 நகராட்சிகளில் இருக்கக்கூடிய மின்சார ஊழியர்களுக்கு மற்ற வாரியத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப் படுவதைப் போன்று கொடுக்கவேண்டுமென்று ஏற்கனவே நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அந்தச் சமயத்தில் இதிலே இருக்கக்கூடிய சிப்பந்திகளுக்கு அனமலிஸ் இருக்கின்றன என்றும் அந்த அனமலிஸ் பற்றிக் கவனிக்கலாம் என்றும் சொன்னார்கள், அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதை ஆராய்ந்து துறையினருக்கு அனுப்பியிருக்கிறார்கள். துறையினர் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். விரைவில் முடிவு எடுக்கப்படும்.

திரு. என். மருதாசலம் : நகரங்களில் வேலைசெய்யக்கூடிய மின்சார ஊழியர்களுக்கு மற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டும் இன்னும் அவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறதே, கிடைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 2—10—1971 அன்று சம்பள உயர்வு வாரியத்திலே கிடைக்கக்கூடிய அளவுக்குக் கொடுக்கவேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டு வருகிறார்கள். விரைவில் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப் படும்.